OS 210/2019

வா.சா.1 கோவிந்தராஜ் த/பெ பூவாத்த கவுண்டர்

நாள் 25.06.2025

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1. எனது அப்பாவிற்கு யார் யார் வாரிசுகள் என்று காட்டக்கூடிய வாரிசு சான்று நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது அப்பா வாரிசு சான்று வாங்கவில்லை. என் அப்பாவின் இறப்பு சான்று நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் இல்லை. என் அப்பா எப்போது இறந்தார் என்றால் 30.01.2000ல் இறந்துவிட்டார். வழக்குரையில் 30.01.2006 என்று தவறாக உள்ளது என்றால் தவறாக தான் போட்டு இருக்கிறேன். ராமலிங்கம் தாக்கல் செய்த எதிர்வழக்குரையின் பேரில் தான் மற்ற 2 பிரதிவாதிகளுக்கும் பாகம் இருப்பதாக அவர்களையும் இந்த வழக்கில் பாட்னராக சேர்த்திருக்கிறேன் என்றால் சரிதான். எனது தரப்பில் பட்டா எண்.623, 620, 772, மற்றும் 1500 ஆகியவற்றை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்திருக்கிறேன். நான் பட்டா தாக்கல் செய்யாமல் தாக்கல் செய்துவிட்டதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

2. வா.த.சா.ஆ1ல் வழக்கு சொத்து எத்தனையாவது அயிட்ட சொத்தாக உள்ளது என்று சொல்லமுடியுமா என்றால் சொல்லமுடியாது. அதேபோல் வா.த.சா.ஆ2 முதல் 4 வரையான ஆவணங்களில் வழக்கு சொத்து எத்தனையாவது அயிட்ட சொத்தாக உள்ளது என்று சொல்லமுடியுமா என்றால் சொல்லமுடியாது. எனக்கு எப்போது திருமணம் ஆனது என்றால் 1992ல் ஆனது. நான் திருமணம் ஆனவுடன் தனி குடுத்தினம் சென்றேன் என்றால் இல்லை. எனக்கு எப்போதிலிருந்து தனியாக குடும்ப அட்டை உள்ளது என்றால் என்னால் சொல்லமுடியாது. ராமலிங்கத்திற்கு எப்போது திருமணம் ஆனது என்றால் 1996ல் ஆனது. எனது தம்பி ராமலிங்கம் திருமணத்திற்கு பிறகு தனிக்குடித்தனம் சென்றுவிட்டார் என்றால் இல்லை. நானும் எனது தகப்பனாரும் எனது தம்பியும் கூட்டாக இருந்ததற்கு ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் இல்லை. வழக்கு சொத்துகளை யார் அனுபவம் செய்கிறார் என்றால் ராமலிங்கம் அனுபவம் செய்கிறார்.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது)